
1

## சிறப்பு வரைபடம் 1.5:
## இலங்கையின் ஒதுக்குப் போதுமை குறிகாட்டிகளை மேம்படுத்தல்

2021/2022 ஆண்டுகளின் சடுதியான குறைவடைதலைத் தொடர்ந்து, இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வலுவாக அதிகரித்துள்ள அதேவேளை குறுகிய கால படுகடன் குறைவடைந்துள்ளது. இது குறுகிய கால பொறுப்புக்களின் சதவீதமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் உயர்ந்தளவான விகிதத்திற்கு வழிவகுத்து, குறுகிய காலத்தில் நாடு அதன் நிதியியல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நன்கு தயாராகவுள்ளதென்பதனை எடுத்துக்காட்டுகின்றது.


அதேவேளை, இறக்குமதி மாதாங்களாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் கிடைப்பனவில் வெளிப்படுத்தப்படும் இறக்குமதி உள்ளடக்கமும் வலுவாக மேம்பட்டு, வெளிநாட்டுத் துறையில் படிப்படியான மீட்சியைக் குறித்துக்காட்டுகின்றது. ஒதுக்குப் போதுமை குறிகாட்டிகளிலுள்ள இவ்வீட்டல்கள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பொன்றுடன் இணைந்து வெளிநாட்டுத் தாங்கிருப்புக்கள் மற்றும் நாட்டின் பேரண்டபொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன் மதிப்புக்கள் என்பவற்றின் வலுப்படுத்தலினைக் காண்பிக்கின்றன.

### ஒதுக்குப் போதுமை: இறக்குமதிகளின் மாதங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

### ஒதுக்குப் போதுமை: குறுகிய காலப் படுகடனின் சதவீதமாக




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி